# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093643

1. District மாவட்டம்: Namakkal | PS காவல்நிலையம்: V&AC., | Year ஆண்டு: 2020 | FIR No மு.த.அ. எண்: 03/AC/2020 | Date நாள்: 17.10.2020

2. (i) Act சட்டம்: The P.C. Act, 1988 as amended | Sections பிரிவுகள்: 7(a) and 8
   (ii) Act சட்டம்: by the Prevention of Corruption | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: (Amendment) Act, 2018. | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல்: 16.10.2020 | Date to நாள் வரை:
   Time Period : நேர அளவு | Time from நேரம் முதல்: 16.30 Hrs | Time to நேரம் வரை:
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 17.10.2020 | Time நேரம்: at 10.00 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: Volume-III 17.10.2020 | Time நேரம்: at 10.00 hrs.

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய்-மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: திடீர் தணிக்கையின் போது கைக்கப் பெற்ற தொகையின் இடம், சுமார் 2½ கி.மீ தென் கிழக்கே.
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : | District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: திரு. கி. ஜெய்குமார் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்: திரு. தியாகராஜன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு: 05.06.1973 | (d) Nationality : நாட்டினம்: இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில்: காவல் துணை கண்காணிப்பாளர் | (g) Address : முகவரி: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாமக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திருமதி. ரா. ரமணி, (57), க/பெ. பி. நடராஜன், உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் மற்றும் 12 நபர்கள். (விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
[illegible]

[illegible] 17.10.2020 [illegible]

10. Total value of properties stolen / involved
[illegible]

11. Inquest Report / Un-natural death Case No. if any
[illegible]

12. FIR Contents (Attach separate sheet, if required)
[illegible]

[illegible] :-

[illegible]

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No 2 registered the case and took up the investigation / directed ______ Rank ______ to take up the Investigation / Refused Investigation / transferred to PS ______ on point of jurisdiction

[illegible]

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost

[illegible]

[illegible signature]

14. Signature / Thumb impression of the Complainant / Informant
[illegible]

Signature of the Officer in-charge, Police Station
[illegible]

15. Date & Time of despatch to the court
[illegible]

17.10.2020 at 12.30 Hrs.

Name [illegible]
Rank [illegible] ______ No [illegible] ______

[illegible]

* GCP-240-34(Type 2) [illegible]

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.03/AC/2020, u/s. 7(a) and 8 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் வரிசை எண்-7 இன் தொடர்ச்சி,

எதிரிகளின் பட்டியல்

1) திருமதி.ரா. ரமணி (வயது-57), க.பெ.P நடராஜன், உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல்.

2) திரு.G.ஜெயக்குமார் (வயது-48), த.பெ.கோபால், மேற்பார்வையாளர்/ வரைவாளர் நிலை-2, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல்.

3) திருமதி.P.புனிதவதி (வயது-37), க.பெ.கிருஷ்ணமூர்த்தி, வரைவாளர் நிலை-3, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல்.

4) திருமதி.K.கிருஷ்ணஜோதி (வயது-49), க.பெ.வெங்கடாசலம், உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல்.

5) திரு.J.நாகராஜ் (வயது-34), த/பெ.ஜெயபால், கதவு எண்.3/532-6 மித்ரா நகர், குப்பாண்டபாளையம், குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம் (தனியார்).

6) திரு.S.P.முத்துசாமி (வயது-55), த.பெ.பெரியசாமி, கதவு எண்.4/25, குடித்தெரு, சிறுமொளசி-அஞ்சல், திருச்செங்கோடு-வட்டம், நாமக்கல் மாவட்டம். (தனியார்).

7) திரு.K.சுப்பரமணி (வயது-53), த.பெ.கண்ணையன், கதவு எண்.4/93-B., காட்டூர், சேலம்-10. (தனியார்).

8) திரு.D.இராதாகிருஷ்ணன் (வயது-57), த.பெ.தர்மலிங்கம், பழைய கதவு எண்.4, புதிய கதவு எண்.16/180, ராம்நகர், மெய்யனூர், சேலம்-4 (தனியார்).

9) திரு.R.கண்ணன் (வயது-53), த.பெ.ராமமூர்த்தி, கதவு எண்.6/81, உஞ்சனை, குமாரமங்கலம்-வழி, திருச்செங்கோடு-வட்டம், நாமக்கல் மாவட்டம். (தனியார்).

10) திரு.M.ஜெயராஜ் (வயது-33), த.பெ.மெய்யழகன், கதவு எண்.6/19-1, கோபல் செட்டியார் தோட்டம், வேலகவுண்டனூர், ஓமலூர், சேலம் மாவட்டம். (தனியார்).

11) திரு.P.சபரிராஜ் (வயது-36), த.பெ.பன்னீர்செல்வம், கதவு எண்.30/22 மலையாண்டி தெரு, நாமக்கல் (தனியார்).

12) திரு.S ரத்தினவேல் (வயது-62), த.பெ.சக்திவடிவேல், கதவு எண் 581/3, முதல்மாடி, அக்சயம் அபார்ட்மெண்ட், வேலூர் ரோடு, திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம். (துணியர்).

13) திரு.V அருண் (வயது-22), த.பெ.வைகைநாதன், கதவு எண் 2/97 நடுதோளூர், தோளூர்-அஞ்சல், மோகனூர்-வட்டம், நாமக்கல் மாவட்டம். (துணியர்).

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.03/AC/2020, u/s. 7(a) and 8 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் விபரம்:**

நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் ஆகிய நான் 16.10.2020-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 16.30 மணி முதல் 17.10.2020-ஆம் தேதி சனிக்கிழமை அதிகாலை 04.00 மணி வரையில் நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் செய்த திடீர் தணிக்கையில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இன்று 17.10.2020-ஆம் தேதி காலை 10.00 மணிக்கு பதிவு செய்யப்பட்ட நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.03/AC/2020, u/s. 7(a) and 8 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் விபரம் பின்வருமாறு:-

நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் உதவி இயக்குநர் மற்றும் அவருடைய அலுவலர்கள் புதிய வீட்டுமனை அங்கீகாரம் வழங்குதல், மூன்றடுக்கு மாடிக்கு மேல் உள்ள கட்டிடங்களுக்கு அங்கீகாரம் வழங்குதல், அங்கீகாரம் பெறப்படாத பழைய வீட்டு மனைகளுக்கு புதிய அங்கீகாரம் வழங்குதல், தனி வீட்டுமனை அங்கீகாரம் வழங்குதல் போன்ற பணிகளுக்காக பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும், புரோக்கர்கள், நில மேம்படுத்தாளர்கள், என்ஜினியர்கள் மூலமாகவும், அலுவல் நேரத்திலும், அதற்கு பின்பும் 16.10.2020-ம் தேதி கையூட்டு பெறப்போவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் திடீர் தணிக்கை மேற்கொள்ள அரசு சாட்சிகள் 1) திரு.இரா.ராஜா, மண்டல துணை வட்டாட்சியர் எண்-II, வட்டாட்சியர் அலுவலகம், நாமக்கல் வட்டம் மற்றும் 2) திரு.ம.ஜெயப்பிரகாஷ், வருவாய் ஆய்வாளர், நல்லிபாளையம் பிர்க்கா, நாமக்கல் மாவட்டம் ஆகியோர்களை அழைத்துக் கொண்டு 16.10.2020-ஆம் தேதி மாலை சுமார் 16.15 மணிக்கு நான், காவலர்கள் குழுவுடன் அரசு வாகனத்தில் நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் முன்பு மாலை சுமார் 16.30 மணிக்கு

சென்றடைந்தேன். நாமக்கல் To பரமத்தி செல்லும் கிழமேல் சாலையின் தெற்குபுறம் உள்ள அண்ணாநகர் தென்வடலாக செல்லும் சாலையில் மேற்கு பார்த்தவாறு அமைந்துள்ள கதவு எண்.6/12, 17-ல் உள்ள தனியாருக்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வரும் நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தின் உள்ளே நுழைந்து தெற்குப்பக்கம் உள்ள உதவி இயக்குநர் அறையில் வடக்கு நோக்கி உதவி இயக்குநர் இருக்கையில் அமர்ந்திருந்த பெண்ணிடம் என்னையும், என்னுடன் வந்த இரண்டு அரசு சாட்சிகளையும் மற்றும் காவலர்களையும் அவரவர்களின் அடையாள அட்டைகளை காட்டி அறிமுகம் செய்து கொண்டேன். பின்பு நான் அவரிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.ரா.ரமணி என்றும், உதவி இயக்குநராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். நான் குழுவினருடன் உதவி இயக்குநர் அவர்களிடம் அவருடைய அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய வந்திருப்பதாக தகவல் தெரிவித்து, அதன்பிறகு அரசு சாட்சிகள் முன்னிலையில் அந்த அலுவலகத்தை திடீர் தணிக்கை மேற்கொண்டேன். அப்போது அந்த அலுவலகத்தில் பணிபுரியும் மேற்பார்வையாளர்/ வரைவாளர் நிலை-2 திரு.கோ.ஜெயக்குமார், வரைவாளர் நிலை-3 திருமதி.ப.புனிதவதி, வரைவாளர் நிலை-3 திருமதி.செ.சந்தியா, அளவர்/உதவி வரைவாளர் திருமதி.தே.புவனேஸ்வரி, உதவியாளர் திருமதி.கி.கிருஷ்ணஜோதி, தட்டச்சர் திருமதி.க.கவிதா, அலுவலக உதவியாளர் திருமதி.சு.ராதா ஆகிய அலுவலர்கள் அலுவலகத்தில் பணியில் இருந்தனர். அனைத்து அலுவலர்களையும் அவரவர்கள் அமர்ந்திருக்கும் அவரது இருக்கையிலேயே அமர்ந்திருக்குமாறு நான் கேட்டுக் கொண்டேன். அலுவலகத்தின் வரவேற்பறையிலும், அலுவலகத்தின் உள்ளேயும் சில தனிநபர்கள் இருந்தனர், அவர்களையும் அந்தந்த இடத்திலேயே கொரோனா கால அரசு வழிகாட்டுதல்களின்படி தனித்தனியாக அமர வைத்து காவலர்களை பாதுகாப்பிற்கு நியமித்தேன். பின்னர் நான் அரசு சாட்சிகள் மற்றும் காவல் ஆய்வாளர் திருமதி.எம்.நல்லம்மாள் அவர்கள் உதவியுடன் உதவி இயக்குநர் திருமதி.ரமணி அவர்களின் இருக்கை முழுவதையும் சோதனை செய்தேன். அப்போது உதவி இயக்குநரிடம் இன்றைய தினம் அரசு கணக்கில் வசூல்

செய்யப்பட்ட தொகை விபரங்கள் குறித்துக் கேட்டேன். அவர் இன்றைய தினம் அரசுக்கணக்கில் கருவூலத்தில் செலுத்துவதற்கும், வங்கிக் கணக்கில் செலுத்துவதற்கும் ரசீதுகள் எதுவும் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார். மேலும் அவர் இன்றைய தினம் Dr.B.பாஸ்கர் M.V.Sc., பொம்மைக்குட்டைமேடு, செல்லப்பம்பட்டி, நாமக்கல் என்பவர் புல எண்.222/2சி-ல் உள்ள 1.67 ஏக்கர் நிலத்திற்கான சேந்தமங்கலம் சார்பதிவாளர் அவர்களின் அரசு வழிகாட்டு மதிப்பீட்டு தொகை அறிக்கையை மனுவாக சமர்ப்பித்துள்ளார் என்று தெரிவித்து ஆஜர் செய்தார். அலுவலகத்தில் உள்ள நிலையான முன்பணம் குறித்து கேட்டபோது இவ்வலுவலகத்திற்கு என்று நிலையான முன்பணம் எதுவும் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார். பின்னர், உதவி இயக்குநர் இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டேன். அவரது டேபிளின் மேல் அலுவலக கோப்பு எண்கள், அவற்றின் விபரங்கள், தனியர்களின் பெயர்கள் மற்றும் செல்போன் எண் மற்றும் மற்ற விபரங்கள் உதவி இயக்குநர் தன் கைப்பட நீலம் மற்றும் பச்சை இங்க் பேனாவிலும், பென்சிலாலும் எழுதப்பட்டுள்ள விபரங்கள் அடங்கிய கத்தையாக பக்கம்-1 முதல் 12 வரை உள்ள தாள்கள் பார்வையிடப்பட்டது, அதில் அரசு சாட்சிகளும், நானும் கையொப்பம் செய்து விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். பின்னர் உதவி இயக்குநர் திருமதி.ரமணி அவர்களை சோதனையிட்டதில் அவரிடம் பணம் ஏதும் இல்லை. அவரை விசாரித்ததில் இன்று காலை அலுவலகம் வரும்போது சொந்த செலவுக்கு ரூ.280/- கொண்டு வந்திருந்ததாகவும், அதை தனது ஹேண்ட்பேக்கில் வைத்துள்ளதாக தெரிவித்து எடுத்து ஆஜர் செய்தார். அவரது விளக்கம் ஏற்கத் தக்க வகையில் இருந்ததால் அப்பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைத்தேன். பின்னர் உதவி இயக்குநர் மற்றும் அரசு சாட்சிகளை உடன் அழைத்துக் கொண்டு அலுவலக வாசற்படி முன்பக்கம் உள்ள வரவேற்பு அறைக்கு வரப்பட்டது. அங்கு தெற்கு பக்கமுள்ள மேற்பார்வையாளர் அறைக்குள் நுழைந்தபோது அங்கிருந்த நபர் அவருக்கு பின்னால் தெற்குப்புற ஜன்னல் வழியாக ஒரு கத்தையாக பணத்தை தூக்கி வெளியில் போட்டார். பிறகு அவரை விசாரித்த போது அவரது பெயர்

G.ஜெயக்குமார் என்றும், அவர் மேற்பார்வையாளர்/வரைவாளர் நிலை-2-ஆக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். பின்னர் அவரின் இருக்கை முழுவதும் சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டேன். அப்போது சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. நான் அரசு சாட்சிகளை அழைத்துக் கொண்டு அலுவலகத்திற்கு வெளியே சென்று மேற்பார்வையாளர் அமர்ந்திருந்த அறையின் ஜன்னல் பின்புறம் பார்த்தபோது அங்கு கத்தையாக 500 ரூபாய் நோட்டுக்கள் கீழே கிடந்தது. அதை அரசு சாட்சிகள் உதவியுடன் எடுத்து எண்ணிப் பார்த்தபோது ரூ.10,000/- (ரூ.500 X 20) இருந்தது. அந்த பணம் குறித்து திரு.ஜெயக்குமார் அவர்களிடம் கேட்டபோது, அவர் அலுவலகம் வந்தபோது கொண்டு வந்ததாக தெரிவித்தார். அந்த பணத்தை ஏன் ஜன்னல் வழியாக வெளியில் போட்டீர்கள் என்று கேட்டபோது, அவர் யாரோ ரெய்டு வந்துள்ளதாக சந்தேகப்பட்டு பயந்து வெளியில் போட்டுவிட்டேன் என்று சொன்னார். அவர் சொன்ன விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததால் மேற்படி பணம் ரூ.10,000/- விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். பின்னர் அலுவலகத்தின் வரவேற்பறைக்கு வந்தபோது, அங்கு நின்று கொண்டிருந்த நபர் பற்றி விசாரிக்க அவரது பெயர் J.நாகராஜ், த/பெ.ஜெயபால், குமாரபாளையம் என்றும், தான் என்ஜினியர் என்றும், குமாரபாளையம் அமானி கிராமம் அருகில் புதிய வீட்டுமனை லே-அவுட் போட்டுள்ளதாகவும், அது சம்மந்தமான விண்ணப்பம் கொடுத்து கோப்பு எண்.172/2020-ஆக அலுவலகத்தில் நிலுவையில் உள்ளதாகவும், அது தொடர்பாக உதவி இயக்குநர் அவர்களை பார்த்து விபரம் தெரிந்து கொள்ள அலுவலகம் வந்ததாகவும் தெரிவித்தார். அவரை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டதில் அவரது பேண்ட்டின் வலதுபுற பின்பாக்கெட்டில் மணிபர்சில் வைத்திருந்த பணத்தை இரண்டு மடிப்புகளுடன் எடுத்து ஆஜர் செய்தார். அதில் ஒரு மடிப்புடன் ரூ.360/- (ரூ.100X3, ரூ.10X 6) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.360/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. மற்றொரு மடிப்புடன் இருந்த பணத்தை எண்ணிப் பார்த்த

போது மொத்தம் ரூ.9,000/- (ரூ.2000 X 1, ரூ.500 X 14) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது அவர் அலுவலக செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அதனால் மேற்படி பணம் ரூ.9,000/- விசாரணைக்காக நான் கைப்பற்றிக்கொண்டேன். அவர் வைத்திருந்த கோப்பு எண்.172/2020 சம்மந்தமான வரைபடம் மற்றும் புலப்பட நகல்கள் 3-தாள்கள் உள்ளதை பார்வையிடப்பட்டது. அதில் அரசு சாட்சிகளும், நானும் கையொப்பம் செய்து விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். அவரது அருகில் நின்று கொண்டிருந்த மற்றொரு நபர் பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் திரு.தினேஷ்குமார், த/பெ.பழனிசாமி, குமாரபாளையம் என்றும், தான் நாகராஜ் என்ஜினியர் அவர்களிடம் டிரைவராக வேலை செய்து வருவதாகவும், தான் ஓட்டி வந்த கார் அலுவலகத்தின் வெளியில் நிற்பதாகவும் தெரிவித்தார். அவரை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டதில் அவரிடம் பணம் ஏதும் இல்லை. பின்னர் அரசு சாட்சிகளை அழைத்துக் கொண்டு சந்தேகத்தின் பேரில் என்ஜினியர் அவர்களின் பதிவு எண்.TN 58 AJ 6122 கொண்ட ஹோண்டோ மொபிலியோ கார் முழுவதும் சோதனையிடப்பட்டது. காரின் டிரைவர் சீட்டின் முன்புறம் உள்ள டேஷ்போர்டில் இருந்த மணிபர்சில் மடிப்புடன் பணம் இருந்தது. அதை அரசு சாட்சிகள் உதவியுடன் எடுத்து எண்ணிப் பார்த்த போது ரூ.5,080/- (ரூ.500 X 10, ரூ.10 X 8) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அந்த பணம் தனது சம்பளப் பணம் என்று சொன்னார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.5080/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் வரவேற்பறையில் இருந்த மற்றொரு நபர் பற்றி விசாரிக்க தனது பெயர் S.P.முத்துசாமி, த/பெ.பெரியசாமி, சிறுமொளசி என்றும், தான் ராயர்பாளையம் அருகில் பிரண்ட்ஸ் பேப்பர் அன்ட் போர்ட்ஸ் என்ற பெயரில் கம்பெனி ஆரம்பிக்க உள்ளதாகவும், அது சம்மந்தமாக ஆன்லைனில் விண்ணப்பம் செய்து கோப்பு எண்.652/2020 கொடுக்கப்பட்டு இந்த அலுவலகத்தில் நிலுவையில் உள்ளதாகவும், அது தொடர்பாக உதவி இயக்குநர் அவர்களை பார்த்து நிலத்தின் பட்டா, அ-பதிவேடு மற்றும் FMB நகல்களை கொடுக்க அலுவலகம் வந்ததாகவும் தெரிவித்தார். அவரை சந்தேகத்தின் பேரில்

சோதனையிட்டதில் அவரது சட்டையின் இடதுபக்க மேல் வெளிபாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை மடிப்புடன் எடுத்து ஆஜர் செய்தார். அதில் ஒரு மடிப்புடன் ரூ.2,240/- (ரூ.500X3, ரூ.200X2, ரூ.100X3, ரூ.10X 4) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவரது விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் மேற்படி பணம் ரூ.2,240/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் அவரை சோதனையிட அவரது சட்டையின் இடதுபக்க மேல் உள்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை மடிப்புடன் எடுத்து ஆஜர் செய்தார். அதில் மடிப்புடன் ரூ.15,000/- (ரூ.2000 X 5, ரூ.500X10) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது அவர் அலுவலக செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அதனால் மேற்படி பணம் ரூ.15,000/-ஐ விசாரணைக்காக நான் கைப்பற்றிக் கொண்டேன். அவர் வைத்திருந்த கோப்பு எண்.652/2020 சம்மந்தமான நிலத்தின் பட்டா, அ-பதிவேடு மற்றும் FMB நகல்கள் 6-தாள்கள் கொண்டது பார்வையிடப்பட்டது. அதில் அரசு சாட்சிகளும், நானும் கையொப்பம் செய்து விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அங்கு இருந்த மற்றொரு நபர் பற்றி விசாரிக்க தனது பெயர் M.ராஜேந்திரன், த/பெ.முத்துசாமி, சிறுமொளசி, திருச்செங்கோடு என்றும், தனது நண்பர் திரு.முத்துசாமி அவர்களுடன் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அவரை சந்தேகத்தின் பேரில் சோதனையிட அவரிடம் கைப்பற்றும்படி பணமோ, பொருளோ ஏதும் இல்லை. மேலும் அங்கு இருந்த மற்றொரு நபர் பற்றி விசாரிக்க தனது பெயர் C.சதீஷ்குமார், த/பெ.சின்னுசாமி, பொம்மைகுட்டைமேடு, தாளம்பாடி என்றும், தான் புதிய வீட்டுமனை லே-அவுட் அங்கிகாரம் பெற விண்ணப்ப மனுவுடன் வந்திருப்பதாக தெரிவித்தார். அவரை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டதில் அவரது சட்டையின் இடதுபக்க மேல்வெளிபாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை மடிப்புடன் எடுத்து ஆஜர் செய்தார். அதில் ஒரு மடிப்புடன் ரூ.2,100/- (ரூ.500X4, ரூ.100X1) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்ததால் மேற்படி பணம் ரூ.2,100/- அவரிடம் திரும்ப

கொடுக்கப்பட்டது. மேற்படி வரவேற்பறையில் இருந்த டேபிளின் முன்புறம் அமர்ந்திருந்த நபரை பற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் திருமதி.சு.ராதா என்றும், தான் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை சந்தேகத்தின்பேரில் சோதனையிட்டதில் அவரிடம் பணம் ஏதும் இல்லை. அவரை விசாரித்ததில் இன்று காலை அலுவலகம் வரும் போது சொந்த செலவுக்கு ரூ.370/- கொண்டு வந்திருந்ததாகவும், அதை தனது ஹேண்ட்பேக்கில் வைத்துள்ளதாக தெரிவித்து எடுத்து ஆஜர் செய்தார். அதனால் அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அப்போது அலுவலகத்திற்கு இரண்டு நபர்கள் வந்தனர். அதில் ஒருவரை விசாரிக்க, அவர் தனது பெயர் D.ராதாகிருஷ்ணன், த/பெ.தர்மலிங்கம், மெய்யனூர், சேலம் என்றும், திரு.வெங்கடாசலம், திரு.கணேசன் மற்றும் திரு.மோகன்ராஜ் பெயர்களில் வெண்ணந்தூரில் வீட்டுமனை லே-அவுட் போட்டுள்ளதாகவும், அது சம்மந்தமாக விண்ணப்பம் கொடுத்து கோப்பு எண்.155/2020 நிலுவையில் உள்ளதாகவும், அதில் சாலை அமைப்பு வரைபடம் திருத்தம் செய்வது சம்மந்தமாக இன்று அலுவலகம் வந்து உதவி இயக்குநர் அவர்களை சந்தித்து புதிய பிளான் நகல்களை கொடுத்துவிட்டு வெளியில் சென்றுவிட்டு பின்னர் அலுவலகத்திற்கு உதவி இயக்குநர் அவர்களை மீண்டும் பார்க்க வந்ததாக தெரிவித்தார். அவரை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டதில், அவரது சட்டையின் இடதுபுற மேல்வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த 500 ரூபாயை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது, அவர் அதை தன்னுடைய சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் மேற்படி பணம் ரூ.500/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. பின்னர் அவரது பேண்டின் இடதுபக்க முன்பாக்கெட்டில் வைத்திருந்த இரண்டு கட்டுகளாக இருந்த 500 ரூபாய் நோட்டுக்களாக எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப் பார்த்த போது அதில் ஒரு கட்டில் ரூ.50,000/- (ரூ.500 X 100)-மும், அதேபோல் மற்றொரு கட்டில் ரூ.50,000/- (ரூ.500 X 100)-மும் இருந்தது. மேலும் அவர் தனது பேண்டின் வலதுபுற முன் முன்பாக்கெட்டில் வைத்திருந்த மடிப்புடன் இருந்த 500 ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் உதவியுடன்

எண்ணிப் பார்த்த போது அதில் ஒரு மடிப்புடன் ரூ.20,000/- (ரூ.500 X 40) இருந்தது. மேற்படி பணம் மொத்தம் ரூ.1,20,000/- குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் தனது சொந்த பணம் என்று தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக் கொள்ளத் தக்க வகையில் இல்லாததால் மேற்படி பணம் ரூ.1,20,000/- விசாரணைக்காக நான் கைப்பற்றிக் கொண்டேன். மேற்படி திரு.ராதாகிருஷ்ணன், த/பெ.தர்மலிங்கம், மெய்யனூர், சேலம் என்பவர் அருகில் இருந்த நபரை பற்றி விசாரிக்க, தனது பெயர் K.சுப்ரமணி, த/பெ.கன்னையன், காட்டூர், P.நாட்டாமங்கலம், சேலம் என்றும், தான் மேற்படி ராதாகிருஷ்ணன் அவர்களுடன் வந்ததாக சொன்னார். அவரை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டதில், அவரது பேண்டின் வலதுபக்க முன்பாக்கெட்டில் வைத்திருந்த மூன்று கட்டுகளாக இருந்த 500 ரூபாய் நோட்டுக்களை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப் பார்த்த போது அதில் ஒரு கட்டில் ரூ.50,000/- (ரூ.500 X 100)-மும், இரண்டாவது கட்டில் ரூ.50,000/- (ரூ.500 X 100)-மும், மூன்றாவது கட்டில் ரூ.50,000/- (ரூ.500 X 100)-மும் ஆக மொத்தம் ரூ.1,50,000/- பணம் இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் தனது சொந்த வேலைக்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக் கொள்ளத் தக்க வகையில் இல்லாததால் மேற்படி பணம் ரூ.1,50,000/- விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். அப்போது ஒருவர் அலுவலகத்திற்கு உள்ளே வந்தார். அவரைப் பற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் R.கண்ணன், த/பெ.ராமமூர்த்தி, உஞ்சனை, திருச்செங்கோடு என்றும், ராயர்பாளையத்தைச் சேர்ந்த திரு.ஜிஜேந்திரன் என்பவர் கவுண்டம்பாளையம் ஊராட்சி, குமாரபாளையம் கிராமத்தில் உள்ள RKS நகர் என்ற அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் பெறுவது சம்மந்தமாக விண்ணப்பம் கொடுத்து கோப்பு எண்.196/2020 நிலுவையில் உள்ளதாகவும், அது சம்மந்தமாக உதவி இயக்குநர் அவர்களை சந்திக்க அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அவரை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டதில், அவரது பேண்டின் வலதுபக்க பின்பாக்கெட்டில் வைத்திருந்த மணிபர்ஸை எடுத்து ஆஜர் செய்தார். அதில் இருந்த பணத்தை அரசு சாட்சிகள் உதவியுடன்

எண்ணிப் பார்த்த போது, அதில் மடிப்புடன் ரூ.1450/- (ரூ.500 X 2, ரூ.100 X 4, ரூ.50 X 1) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது அவர் அதை தன்னுடைய சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்தார். மேற்படி பணம் ரூ.1,450/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் அவர் தனது பேண்டின் வலதுபக்க முன்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை மடிப்புடன் எடுத்து ஆஜர் செய்தார். அதை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப் பார்த்த போது ரூ.25,000/- (ரூ.500 X 50) பணம் இருந்தது. மேலும் அவர் தனது பேண்டின் இடதுபக்க முன்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை மடிப்புடன் எடுத்து ஆஜர் செய்தார். அதை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப் பார்த்த போது, அதில் மடிப்புடன் ரூ.15,000/- (ரூ.500 X 30) இருந்தது. மேற்படி பணம் ரூ.40,000/- குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் தனது அலுவலக செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக் கொள்ளத் தக்க வகையில் இல்லாததால் மேற்படி பணம் ரூ.40,000/-ஐ விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அவர் வைத்திருந்த நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டம் கிராம எண்.37 நெய்க்காரப்பட்டி புல எண்.90/1A பாகம் மனை பிரிவுகள் சம்மந்தான லே அவுட் வரைபடம் 1-தாள் பார்வையிடப்பட்டது, அதில் அரசு சாட்சிகளும், நானும் கையொப்பம் செய்து விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அலுவலகத்திற்கு வந்த மற்றொரு நபர் பற்றி விசாரிக்க, தனது பெயர் A.நடராஜன், த/பெ.அங்கமுத்து, M47 மேம்பால நகர், சூரமங்கலம், சேலம் என்றும், தான் பில்டிங் பிளான் சம்மந்தமாக உதவி இயக்குநர் அவர்களை பார்க்க வந்திருப்பதாக தெரிவித்தார். அவரை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டதில், அவரது சட்டையின் இடதுபக்க மேல்வெளிபாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை மடிப்புடன் எடுத்து ஆஜர் செய்தார். அதில் ஒரு மடிப்புடன் ரூ.1,510/- (ரூ.500X2, ரூ.100X5, ரூ.10X1) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்ததால் மேற்படி பணம் ரூ.1,510/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் மேற்படி திரு.நடராஜன் அவர்களுடன் வந்த மற்றொரு நபர் பற்றி விசாரிக்க, தனது பெயர் A.லட்சுமணன், த/பெ.ஆறுமுகம்,

சின்ன சாத்தப்பாடி, மேச்சேரி, சேலம் என்றும், தான் நடராஜன் அவர்களுடன் பில்டிங் பிளான் சம்மந்தமாக உதவி இயக்குநர் அவர்களை பார்க்க வந்திருப்பதாக தெரிவித்தார். அவரை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டதில், அவரது சட்டையின் இடதுபக்க மேல்வெளிபாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை மடிப்புடன் எடுத்து ஆஜர் செய்தார். அதில் பணம் ரூ.110/- (ரூ.100X1, ரூ.10X1) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது அவர் அதை தன் சொந்த செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்ததால் மேற்படி பணம் ரூ.110/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. அப்போது இரண்டு நபர்கள் கையில் ஆவணங்களுடன் அலுவலகத்திற்குள் வந்தனர். அதில் ஒருவரை பற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் M.ஜெயராஜ், த/பெ.மெய்யழகன், மேலாளர், ACT புரோமோட்டர்ஸ் அண்டு பில்டர்ஸ், ஓமலூர், சேலம் என்றும், தான் நாமக்கல்லில் Building and Construction அலுவலகம் வைத்திருப்பதாகவும், அனுமதியற்ற மனைப்பிரிவு விண்ணப்ப கோப்பு எண்கள்.325/2020, 143/2020 மற்றும் 427/2020 நிலுவையில் உள்ளதாகவும், இன்று GV Visual Creation உரிமையாளர் சவுந்தர்ராஜ் என்பவர் சேலத்திலிருந்து பஸ்ஸில் கொடுத்தனுப்பிய கோப்பு எண்கள்.325/2020 மற்றும் 143/2020 ஆகியவற்றை பெற்று, அதில் பிழைத்திருத்தம் செய்வது சம்மந்தமாக உதவி இயக்குநர் அவர்களை சந்திக்க வந்ததாக தெரிவித்தார். அவரை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டதில், அவரது பேண்டின் இடதுபக்க வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த மணிபர்சையும், மடிப்புடன் இருந்த பணத்தையும் எடுத்து ஆஜர் செய்தார். அந்த மணிபர்சில் பணம் ரூ.200/- (ரூ.100 X 2) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது அவர் அதை தன்னுடைய சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் மேற்படி பணம் ரூ.200/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் அதில் மடிப்புடன் இருந்த பணத்தை அரசு சாட்சிகள் உதவியுடன் பெற்று எண்ணிப் பார்க்க ரூ.7940/- (ரூ.2000 X 3, ரூ.500 X 3, ரூ.100 X 3, ரூ.50 X 2, ரூ.20 X 2) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் தனது அலுவலக செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக்

கொள்ளத் தக்க வகையில் இல்லாததால் மேற்படி பணம் ரூ.7,940/- விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மேற்படி கோப்பு எண்கள்.325/2020, 143/2020 மற்றும் 427/2020 சம்மந்தமான உதவி இயக்குநர் கையொப்பமிடாமல் உள்ள மனைப்பிரிவு வரைபடங்கள்-4 சாலை அமைப்பு வரைபடம்-2 கொண்டது, ஆக மொத்தம் 6 தாள்கள் உள்ளதை பார்வையிடப்பட்டு, அரசு சாட்சிகளும், நானும் கையொப்பம் செய்து விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மேற்படி திரு.ஜெயராஜ் அவர்கள் அருகில் இருந்த நபரிடம் விசாரிக்க, தனது பெயர் P.சபரிராஜ், த/பெ.பன்னீர்செல்வம் என்றும், ACT புரோமோட்டர்ஸ் அண்டு பில்டர்ஸ், நாமக்கல் நிறுவனத்தில் பணிபுரிவதாகவும், தான் மேலாளர் ஜெயராஜ் அவர்களுடன் வந்ததாக சொன்னார். அவரை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டதில், அவரது சட்டையின் இடது பக்க மேல்வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த மடிப்புடன் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப் பார்த்த போது அதில் ரூ.1,370/- (ரூ.500 X 2, ரூ.100 X 3, ரூ.10 X 7) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது அவர் அதை தன் சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் மேற்படி பணம் ரூ.1,370/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் அவர் தனது பேண்டின் இடதுபக்க வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த மடிப்புடன் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப் பார்த்த போது அதில் ரூ.1,05,000/- (ரூ.2000 X 52, ரூ.500 X 2) இருந்தது. அது குறித்து அவரிடம் விசாரிக்க அவர் DTCP அலுவலக செலவிற்காக அவரது முதலாளி திரு.தங்கராஜ் கொடுத்த பணம் என்று சொன்னார். அந்த பணம் ரூ.1,05,000/- விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். அப்போது மேலும் மூன்று நபர்கள் பிளாஸ்டிக் பைகளில் ஆவணங்களுடன் அலுவலகத்திற்குள் வந்தனர். அவர்களில் ஒருவரை விசாரிக்க, அவர் தனது பெயர் S.ரத்தினவேல் த/பெ.சக்திவடிவேல் என்றும், தான் திருச்செங்கோடு விவேகானந்தா கல்வி நிறுவனத்தின் டைரக்டர்(அட்மின்)-ஆக பணிபுரிந்து வருவதாகவும், விவேகானந்தா கல்வி நிறுவனங்களின் ஏற்கனவே உள்ள அனுமதியற்ற கல்வி

நிறுவனங்களின் வரண்முறைப்படுத்துதல் திட்டத்தின் கீழ் (அரசாணை எண் 76 வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சி துறை, நாள்: 14.06.2018) விண்ணப்பிக்கப்பட்ட சேலம் அலுவலக பழைய கோப்பு எண்.16683/2018/சே.ம-3 / நாமக்கல் அலுவலக கோப்பு ந.க.எண்.27/2020 மற்றும் சேலம் அலுவலக பழைய கோப்பு எண்.16684/2018/சே.ம-3 / நாமக்கல் அலுவலக கோப்பு ந.க.எண்.28/2020 ஆகியவைகள் அலுவலகத்தில் நிலுவையில் உள்ளதாகவும், அது சம்மந்தமாக திருத்திய மனையிட வரைபடம், கட்டிட வரைபடம் மற்றும் ஆவணங்களை உதவி இயக்குநர் அவர்களை சந்தித்து கொடுக்க வந்ததாக தெரிவித்தார். அவரை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டதில், அவரது பேண்டின் வலதுபக்க பின்பாக்கெட்டில் மடிப்புடன் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.1,910/- (ரூ.500 X 3, ரூ.200 X 1, ரூ.100 X 2, ரூ.10 X 1) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது அவர் அதை தன்னுடைய சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் மேற்படி பணம் ரூ.1,910/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் அவர், தனது பேண்டின் வலது முன்பக்கத்தில் உள்ள ரகசிய பாக்கெட்டில் மடிப்புடன் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் உதவியுடன் பெற்று எண்ணிப் பார்க்க ரூ.10,800/- (ரூ.500 X 21, ரூ.50 X 6) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் அலுவலக செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். அதனால் மேற்படி பணம் ரூ.10,800/- விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அவர் கையில் வைத்திருந்த அவர் தன் கைப்பட நீலம் மற்றும் கருப்பு நிற மையினாலும், பென்சிலாலும் கல்லூரிகள் பற்றி விபரம் குறிப்பிட்டு மற்றும் தொகை விபரம் எழுதப்பட்டுள்ளது 2 தாள்கள் கொண்டது பார்வையிடப்பட்டு, அரசு சாட்சிகளும், நானும் கையொப்பம் செய்து விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மேற்படி இரண்டு கோப்புகள் சம்மந்தான ஆவணங்களை நானும், அரசு சாட்சிகளும் பார்வையிட்டு அவர்களிடம் திரும்ப ஒப்படைத்தேன். மேற்படி திரு.ரத்தினவேல் அவர்கள் அருகில் இருந்த இரண்டு நபர்களை பற்றி விசாரிக்க, அதில் ஒருவர் தனது பெயர் P.பச்சையப்பன், த/பெ.பழனிசாமி என்றும், திருச்செங்கோடு

விவேகானந்தா கல்வி நிறுவனத்தின் அலுவலக துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருவதாகவும், மற்றொருவர் தனது பெயர் திரு.ரகுராமன், த/பெ.நாகராஜன் என்றும், திருச்செங்கோடு விவேகானந்தா கல்வி நிறுவன சேர்மேன் டிரைவராக பணிபுரிந்து வருவதாகவும், தெரிவித்தனர். அவர்களை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டதில், அவர்களிடம் பணம் ஏதும் இல்லை. அப்போது மேலும் ஒரு நபர் கையில் சில ஆவணங்களுடன் அலுவலகத்திற்குள் வந்தார். அவரை பற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் V.அருண், த/பெ.வைகைநாதன் என்றும், PKS அசோசியேட் என்ஜினியர் திரு.வினோத்குமார் என்பவரிடம் வேலை செய்து வருகிறேன் என்றும், உத்தேச வீட்டுமனை அப்ருவல் பெற விளக்கம் வேண்டிய விண்ணப்ப மனுவுடன் உதவி இயக்குநர் அவர்களை சந்திக்க வந்துள்ளதாக தெரிவித்தார். அவரை சந்தேகத்தின் பேரில் சோதனையிட்டதில், அவரது சட்டையின் இடதுபக்க மேல்வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதில் ரூ.1,450/- (ரூ.200 X 4, ரூ.100 X 5, ரூ.50 X 3,) இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்ட போது அவர் அதை தன்னுடைய சொந்த செலவிற்கு கொண்டு வந்ததாக தெரிவித்ததால் மேற்படி பணம் ரூ.1,450/- அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது. மேலும் அவர் தனது பேண்டின் வலதுபக்க முன்பாக்கெட்டில் இருந்து இரண்டு மடிப்புகளுடன் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை அரசு சாட்சிகள் உதவியுடன் பெற்று எண்ணிப் பார்க்க ஒரு மடிப்பில் ரூ.12,000/- (ரூ.2,000 X 6) என்றும், மற்றொரு மடிப்பில் ரூ.11,000/- (ரூ.500 X 22) என்றும், ஆக மொத்தம் ரூ.23,000/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவரது ஓனர் DTCP அலுவலக செலவிற்காக கொடுத்த தொகை என்று சொன்னார். மேற்படி பணம் ரூ.23,000/- விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். பின்னர், அலுவலகத்தின் மத்தியில் உதவி இயக்குநர் அவர்கள் அறைக்கு நேராக வடக்கு திசையில் உள்ள ஹாலுக்கு உதவி இயக்குநர் மற்றும் அரசு சாட்சிகளுடன் வரப்பட்டது. அந்த அறையின் மேற்கு சுவற்றில் உள்ள கபோர்டின் அருகே கிழக்கு பார்த்தவாறு திருமதி.புனிதவதி, வரைவாளர் நிலை-3 என்பவர் அமர்ந்திருந்தார். அவரை சோதனையிட்டதில் அவரிடம்

பணம் ஏதுவும் இல்லை. சந்தேகத்தின் பேரில் அவரின் இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அவரின் டேபிளின் மேல்புறம் ஒரு மணிபர்ஸ் இருந்தது. அதை சோதனை செய்ததில் அதில் பணம் ரூ.410/- (ரூ.100X4, ரூ.10X1) இருந்தது. அது குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் தன் சொந்த செலவிற்காக வீட்டிலிருந்து கொண்டு வந்தது என்று சொன்னதால், அந்த பணம் ரூ.410/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவரது இருக்கை டேபிளின் வலதுபக்கம் தரையில் மடிப்புடன் 500 ரூபாய் நோட்டுக்கள் கீழே கிடந்தது. அதை அரசு சாட்சிகள் உதவியுடன் எடுத்து எண்ணிப்பார்த்தபோது அதில் மொத்தம் ரூ.2,000/- (ரூ.500 X 4) இருந்தது. மேலும் அவரின் மேஜையின் வலது பக்க டேபிள் மேல் டிராயரில் கசங்கிய நிலையில் 500 ரூபாய் நோட்டுகள் இருந்தது, அதை அரசு சாட்சிகள் உதவியுடன் எடுத்து எண்ணிப் பார்த்தபோது அதில் மொத்தம் ரூ.7,000/- (ரூ.500 X 14) இருந்தது. மேலும் அவரின் மேஜையின் வலது பக்க டேபிள் கீழ் டிராயரில் மடிப்புடன் 500 ரூபாய் நோட்டுகள் இருந்தது, அதை அரசு சாட்சிகள் உதவியுடன் எடுத்து எண்ணிப் பார்த்தபோது அதில் மொத்தம் ரூ.21,000/- (ரூ.500 X 42) இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக் கொள்ளத் தக்க வகையில் இல்லாததால் மேற்படி மொத்த தொகை ரூ.30,000/- விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். மேலும் அவரது டேபிளின் வலது பக்க கீழ் டிராயரில் திரு.S.ஜிஜேந்திரன், ராயர்பாளையம் என்ற பெயரில் உள்ள தான சாசனப் பத்திரத்தின் பிழை திருத்தல் பத்திரம் அதன் இணைப்பு ஆவணங்களுடன் 14 தாள்கள் கொண்டது பார்வையிடப்பட்டு, அரசு சாட்சிகளும், நானும் கையொப்பம் செய்து விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். பின்னர், அந்த ஹாலில் வடக்குபுறம் கிழக்கு பார்த்தவாறு திருமதி.சந்தியா, வரைவாளர் நிலை-3 என்பவர் அமர்ந்திருந்தார். அவரை சோதனையிட்டதில் அவரிடம் பணம் ஏதுவும் இல்லை. சந்தேகத்தின் பேரில் அவரின் இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அவரின் டேபிளின் மேல்புறம் ஒரு மணிபர்ஸ் இருந்தது. அதை சோதனை செய்ததில் அதில் ரூ.10/- இருந்தது. அது குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் தன் சொந்த செலவிற்காக வீட்டிலிருந்து கொண்டு வந்தது என்று சொன்னதால், அந்த

பணம் ரூ.10/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவர் தான் கர்ப்பிணியாக உள்ளேன் என்று கூறியதன் அடிப்படையில் அவரை நான் உதவி இயக்குநர் அனுமதியுடன் அவரது வீட்டிற்கு மாலை 18.50 மணிக்கு அனுப்பி வைத்தேன். பின்னர், அந்த ஹாலில் வடக்குபுறம் தெற்கு பார்த்தவாறு திருமதி.புவனேஷ்வரி, அளவர்/உதவி வரைவாளர் என்பவர் அமர்ந்திருந்தார். அவரை சோதனையிட்டதில் அவரிடம் பணம் ஏதுவும் இல்லை. சந்தேகத்தின் பேரில் அவரின் இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அவரின் டேபிளின் மேல்புறம் ஒரு ஹேண்ட்பேக் இருந்தது. அதை சோதனை செய்த போது அதில் ஒரு மணிபர்ஸ், ஒரு டைரியும் இருந்தது. அவற்றை சோதனை செய்ததில் மணிபர்ஸில் ரூ.200/- (ரூ.100X2) இருந்தது. அந்த டைரியில் புதிய நோட்டுகளாக ரூ.380/- (ரூ.20 X 1, ரூ.10 X 36) இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் தன் சொந்த செலவிற்காக வீட்டிலிருந்து கொண்டு வந்தது என்று சொன்னதால், அந்த பணம் மொத்தம் ரூ.580/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர், அந்த ஹாலில் கிழக்கு சுவர் ஓரம் தெற்குபுறம் வடக்கு பார்த்தவாறு திருமதி.கவிதா, தட்டச்சர் என்பவர் அமர்ந்திருந்தார். அவரை சோதனையிட்டதில் அவரிடம் பணம் ஏதுவும் இல்லை. சந்தேகத்தின் பேரில் அவரது இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அவரின் கம்ப்யூட்டருடன் கூடிய டேபிளின் மேல்புறம் ஒரு மணிபர்ஸ் இருந்தது. அதை சோதனை செய்த போது அதில் ரூ.300/- (ரூ.100 X 3) இருந்தது. அது குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் தன் சொந்த செலவிற்காக வீட்டிலிருந்து கொண்டு வந்தது என்று சொன்னதால், அந்த பணம் ரூ.300/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த ஹாலில் திருமதி.சந்தியா, வரைவாளர் நிலை-3 அவர்களின் டேபிள் மேல் உள்ள கம்ப்யூட்டரை பார்த்தவாறு வடக்கு நோக்கி அமர்ந்திருந்த நபரை பற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் P.தங்கமணி, த/பெ.பசுபதி என்றும், தன்னுடைய சொந்த ஊர் திருப்பத்தூர் என்றும், தான் சேலத்தில் உள்ள Sri பில்டர்ஸ் என்ற நிறுவனத்தில் Drawing and Planning Work செய்து வருவதாகவும், எனது ஓனர் திரு.சீனிவாசன் அவர்கள் சொன்னபடி நாமக்கல் அலுவலகம் வந்து உதவி இயக்குநர் திருமதி.ரமணி அவர்களிடம் அறிமுகம்

செய்து கொண்டு அவர் சொன்னபடி அலுவலகத்தில் வேலைகளை செய்து கொண்டிருப்பதாக கூறினார். மேலும் அவரைப்போலவே திரு.சௌந்தர் என்பவருக்கு சொந்தமான GV Visual Creation நிறுவனத்தில் வேலை செய்து வந்த திருமதி.சுபாஷினி என்பவரும் தன்னுடன் அலுவலக வேலைகளை செய்து வருகிறார் என்றும் சொன்னார். அவரை சோதனை செய்த போது அவரது சட்டையின் இடது பக்க மேல்வெளிப்பாக்கெட்டில் ரூ.960/- (ரூ.500 X 1, ரூ.100 X 4, ரூ.50 X 1, ரூ.10 X 1) இருந்தது. அது குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் தன் சொந்த செலவிற்காக வீட்டிலிருந்து கொண்டு வந்த பணம் என்று சொன்னதால், அந்த பணம் ரூ.960/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த ஹாலில் திருமதி.புவனேஷ்வரி, அளவர்/உதவி வரைவாளர் அவர்களின் டேபிளை பார்த்தவாறு வடக்கு நோக்கி அமர்ந்திருந்த பெண்ணிடம் விசாரிக்க, அவர் தனது பெயர் P.சுபாஷினி, த/பெ.பெரியசாமி என்றும், தன்னுடைய சொந்த ஊர் வளையபட்டி அருகில் உள்ள திப்ரமகாதேவி கிராமம் என்றும், தான் திரு.சௌந்தர் என்பவருக்கு சொந்தமாக சேலத்தில் உள்ள GV Visual Creation நிறுவனத்தில் Drawing and Planning Work செய்து வருவதாகவும், எனது ஓனர் திரு.சௌந்தர் அவர்கள் சொன்னபடி நாமக்கல் அலுவலகம் வந்து உதவி இயக்குநர் திருமதி.ரமணி அவர்களிடம் அறிமுகம் செய்து கொண்டு அவர் சொன்னபடி அலுவலகத்தில் வேலைகளை செய்து கொண்டிருப்பதாக கூறினார். மேலும் அவரரைப் போலவே திரு.சீனிவாசன் என்பவருக்கு சொந்தமான Sri பில்டர்ஸ் என்ற நிறுவனத்தில் Drawing and Planning Work செய்து வந்த திரு.தங்கமணி என்பவரும் அலுவலக வேலைகளை செய்து வருகிறார் என்றும் சொன்னார். அவரை சோதனை செய்த போது அவரிடம் பணமோ, பொருளோ எதுவும் இல்லை. மேலும் அந்த ஹாலில் கிழக்குப் பக்கம் உள்ள வாசற்படி அருகில் வடக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த நபரைப் பற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் A.பழனியப்பன், த/பெ.அழகப்பன் என்றும், தான் ஈரோடு உள்ளூர் திட்ட குழுமம் அலுவலகத்தில் களப்பணி உதவியாளராக பணிபுரிந்து 30.06.2005-ல் ஓய்வு பெற்றுள்ளதாகவும், சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் மற்றும் நாமக்கல் மாவட்ட நகர்

ஊரமைப்பு அலுவலகத்தில் உள்ள AD அவர்கள் சொல்லும் கோப்புகளை சரி செய்து தைத்துக் கொடுக்க அவர்கள் கேட்டுக் கொண்டதால், கொரோனா காலம் என்பதால் வாரத்தில் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்கள் வேலைக்கு வந்து வேலைகளை செய்து கொடுப்பேன் என்றும், எனக்கு நாள் ஒன்றுக்கு ரூ.200/-வீதம் அந்தந்த அலுவலக AD அவர்கள் தருவார்கள் என்றும், நாமக்கல் AD திருமதி.ரமணி அவர்கள் சொன்னதின் பேரில் அலுவலகம் வந்து பைல்களை சரிசெய்து தைக்கும் வேலைகளை செய்து கொண்டிருக்கிறேன் என்றும் சொன்னார். அவரை சோதனை செய்ததில் அவர் தனது சட்டையின் இடதுபக்க மேல்வெளிப்பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.60/- (ரூ.10 X 6) எடுத்து ஆஜர் செய்தார். அது குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் தன் சொந்த செலவிற்காக வீட்டிலிருந்து கொண்டு வந்தது என்று சொன்னதால், அந்த பணம் ரூ.60/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அந்த ஹாலின் வடக்குப்புறம் இருந்த ஆவணங்கள் அடுக்கப்பட்டிருந்த மூன்று ரேக்குகள் முழுமையாக சோதனை செய்யப்பட்டது. வடமேற்கு மூலையில் ஒரு ஜெராக்ஸ் மெஷின் உள்ளது. மேலும் அந்த அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு சந்தேகத்திற்கிடமான வகையில் பணமோ, பொருளோ ஏதும் இல்லை. பின்னர், அலுவலக ஹாலின் தெற்கு பக்கம் உள்ள உதவியாளர் அறைக்கு அரசு சாட்சிகள் மற்றும் உதவி இயக்குநர் அவர்களுடன் வரப்பட்டது. அங்கு வடக்கு பார்த்தவாறு உதவியாளர் திருமதி.கிருஷ்ணஜோதி என்பவர் அமர்ந்திருந்தார். அவரை சோதனையிட்டதில் அவரிடம் பணம் ஏதுவும் இல்லை. சந்தேகத்தின் பேரில் அவரின் இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டது. அவரின் டேபிளின் மேல்புறம் Expert என்று லோகோ உள்ள பிரவுன் மற்றும் கருப்பு கலர்கள் கொண்ட உள்ள ஒரு ஹேண்ட்பேக் இருந்தது. அதை சோதனை செய்ததில் அதன் வெளிப்புற அறையில் ரூ.30/- (ரூ.10 X 3,) இருந்தது. அது குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் தன் சொந்த செலவிற்காக வீட்டிலிருந்து கொண்டு வந்தது என்று சொன்னதால், அந்த பணம் ரூ.30/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த ஹேண்ட் பேக்கின் உட்புறம் உள்ள முதல் அறையில் மடிப்புடன் பணம் இருந்தது. அதை அரசு சாட்சிகள்

உதவியுடன் எடுத்து எண்ணிப் பார்த்தபோது அதில் மொத்தம் ரூ.5,000/- (ரூ.2000 X 2, ரூ.500X 1, ரூ.200X 1, ரூ.100X 3) இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்டபோது, அவர் சொன்ன விளக்கம் ஏற்றுக் கொள்ளத் தக்க வகையில் இல்லாததால் மேற்படி தொகை ரூ.5,000/- விசாரணைக்காக கைப்பற்றிக் கொண்டேன். பின்னர் திடீர் தணிக்கையின் தொடர்ச்சியாக நானும், அரசு சாட்சிகளும் அலுவலகத்தில் இருந்த கீழ்கண்ட ஆவணங்கள் பார்வையிட்டோம்.

- பணியாளர்கள் வருகைப்பதிவேடு-2020 பார்வையிடப்பட்டது. அதில் 2020-ஆம் ஆண்டின் அக்டோபர் மாதத்திய வருகை பதிவேட்டில் உதவி இயக்குநர் திருமதி.ரா.ரமணி மற்றும் இதர அலுவலர்கள் 16.10.2020-ஆம் தேதி சுருக்கொப்பங்கள் செய்திருந்தனர்.
- தன் பதிவேடு பாகம்-I பார்வையிடப்பட்டது. அதில் முதல் நடப்பு எண்.001 கடந்த 15.07.2020-ஆம் தேதி வழங்கப்பட்டு இறுதியாக நடப்பு எண்.741-வரை 15.10.2020-ஆம் தேதி வரை எழுதப்பட்டுள்ளது.

மேற்கண்ட பதிவேடுகள் பார்வையிடப்பட்டதற்கு அடையாளமாக சம்பந்தப்பட்ட பக்கங்களில் நானும், அரசு சாட்சிகளும் கையொப்பம் செய்தோம். மேலும் உதவி இயக்குநர் அவர்களிடம் கொடிநாள் நிதி வசூல் இலக்கு குறித்து கேட்டபோது, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து கொடிநாள் நிதி வசூல் இலக்கு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை என்று தெரிவித்தார். பின்னர் அலுவலகத்தின் கிழக்குப் பக்கம் உள்ள பதிவறை மற்றும் மற்ற அனைத்து அறைகள் முழுவதும் சோதனையிடப்பட்டது. அங்கு கைப்பற்றக்கூடிய பணமோ, பொருளோ இல்லை. நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகமானது நாமக்கல் To பரமத்தி செல்லும் கிழமேல் சாலையின் தெற்குபுறம் உள்ள அண்ணாநகரில் தென்வடலாக செல்லும் சாலையில் மேற்கு பார்த்தவாறு அமைந்துள்ள கதவு எண்.6/12, 17-ல் உள்ள தனியாருக்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அலுவலகத்தின் உள்ளே நுழைந்தவுடன் பொதுமக்கள் அமருவதற்கு சுமார் 11 x 10 அடி அளவில் வரவேற்பு அறை உள்ளது. அதில் தெற்கு பார்த்தவாறு அலுவலக உதவியாளர் இருக்கையும், கிழக்கு பார்த்தவாறு பொதுமக்கள் அமரும் இருக்கையும்

போடப்பட்டுள்ளது. மேற்படி வரவேற்பு அறைக்கு எதிரே 8 X 11 அடி அளவில் வடக்கு பார்த்தவாறு மேற்பார்வையாளர் அறை உள்ளது. மேற்படி அறையில் மேற்பார்வையாளர் இருக்கை வடக்கு பார்த்தவாறு உள்ளது. மேலூரம் வரவேற்பு அறைக்கு கிழக்கே 22 x 11 அடி அளவில் மெயின் ஹால் உள்ளது. அந்த அறையில் முதலில் கிழக்கு பார்த்தவாறு வரைவாளர் நிலை-3 இருக்கையும், அடுத்து கிழக்கு பார்தவாறு மற்றொரு வரைவாளர் இருக்கையும் உள்ளது. அதை ஒட்டி தெற்கு பார்த்தவாறு அளவர் / உதவி வரைவாளர் இருக்கை உள்ளது. அளவர் / உதவி வரைவாளர் இருக்கைக்கு எதிரே தட்டச்சர் வடக்கு பார்த்தவாறு இருக்கை உள்ளது. மெயின் ஹாலுக்கு தெற்கு புறம் வடக்கு பார்த்தவாறு 8 X 11 அடி அளவில் உதவி இயக்குநர் அறை உள்ளது. அதில் உதவி இயக்குநர் இருக்கை வடக்கு பார்த்தவாறு உள்ளது. அதன் கிழக்கே வடக்கு பார்த்தவாறு 8 X 11 அடி அளவில் உதவியாளர் அறை உள்ளது. அது வடக்கு பார்த்தவாறு உதவியாளர் இருக்கை உள்ளது. திடீர் தணிக்கை 17.10.2020-ஆம் தேதி அதிகாலை 04.00 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் தணிக்கையின்போது அலுவலர்கள் மற்றும் தனிநபர்கள் அனைவரும் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். மேலும் அலுவலக உடைமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்து கொள்ளப்பட்டது. மேலும் தமிழக அரசின் உத்தரவுப்படி கோவிட்-19 கொரோனா வைரஸ் தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகள் முழுமையாக கடைபிடிக்கப்பட்டது. திடீர் தணிக்கையின் போது அலுவலர்கள் 1)திரு.கோ.ஜெயக்குமார், மேற்பார்வையாளர், 2) திருமதி.ப.புனிதவதி, வரைவாளர் நிலை-3, 3) திருமதி.கி.கிருஷ்ணஜோதி, உதவியாளர், மேற்படி தனியர்கள் 4) திரு.நாகராஜ் த/பெ.ஜெயபால், 5) திரு.முத்துசாமி, த/பெ.பெரியசாமி, 6) திரு.ராதாகிருஷ்ணன், த/பெ.தர்மலிங்கம், 7) திரு.சுப்ரமணி த/பெ.கன்னையன், 8) திரு.கண்ணன் த/பெ.ராமமூர்த்தி, 9) திரு.ஜெயராஜ் த/பெ.மெய்யழகன், 10) திரு.சபரிராஜ் த/பெ.பன்னீர்செல்வம், 11) திரு.ரத்தினவேல் த/பெ.சக்திவடிவேல், 12) திரு.அருண் த/பெ.வைகைநாதன், 13) திரு.தங்கமணி த/பெ.பசுபதி, 14) செல்வி.சுபாஷினி த/பெ.பெரியசாமி மற்றும் 15) திரு.பழனியப்பன் த/பெ.அழகப்பன் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் அரசு சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டது. மேற்படி செயல்முறை நடவடிக்கைகள் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் நான் சொல்ல சொல்ல தலைமைக்காவலர்-1101 திரு.சக்திவேல் என்பவரால்

தட்டச்சு செய்யப்பட்டது. மேற்படி திடீர் தணிக்கையின் போது கைப்பற்றப்பட்ட தொகைகளுக்கு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உரிய விளக்கம் அளிக்க இயலாததாலும், மேலும் அவர்கள் அலுவல் பணியை ஆற்றுகையில் ஏதேனும் குற்றம் இழைத்ததன் விளைவாக அந்த தொகைகள் முறையற்ற முறையிலும், நேர்மையற்ற முறையிலும், அனுகூலமாகவோ, பிரதி பலனாகவோ அவர்களால் பெறப்பட்டிருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதாலும், மேலும் நில உரிமையாளர்கள், நில மேம்படுத்தாளர்கள் மற்றும் இன்ஜினியர்கள் ஆகியோர்கள் தங்களுக்கு அனுகூலமாக வேலைகளை செய்து கொடுப்பதற்காக, முறையற்ற முறையில் அலுவலர்களுக்கு கையூட்டு கொடுப்பதற்கு கொண்டு வந்து இருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருப்பதினாலும், இயக்குநர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் வாய்மொழி ஒப்புதல் பெற்று, எதிரிகள் 1) திருமதி.ரா. ரமணி (வயது-57), க.பெ.P.நடராஜன், உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல், 2) திரு.G.ஜெயக்குமார் (வயது-48), த.பெ.கோபால், மேற்பார்வையாளர்/ வரைவாளர் நிலை-2, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல், 3) திருமதி.P.புனிதவதி (வயது-37), க.பெ.கிருஷ்ணமூர்த்தி, வரைவாளர் நிலை-3, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல், 4)திருமதி.K.கிருஷ்ணஜோதி (வயது-49), க.பெ.வெங்கடாசலம், உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல், 5) திரு.J.நாகராஜ் (வயது-34), த/பெ.ஜெயபால், கதவு எண்.3/532-6 மித்ரா நகர், குப்பாண்டபாளையம், குமாரபாளையம், நாமக்கல் மாவட்டம் (தனியார்), 6) திரு.S.P.முத்துசாமி (வயது-55), த.பெ.பெரியசாமி, கதவு எண்.4/25, குடித்தெரு, சிறுமொளசி-அஞ்சல், திருச்செங்கோடு-வட்டம், நாமக்கல் மாவட்டம். (தனியார்), 7) திரு.K.சுப்பரமணி (வயது-53), த.பெ.கண்ணையன், கதவு எண்.4/93-B,, காட்டூர், சேலம்-10. (தனியார்), 8) திரு.D.இராதாகிருஷ்ணன் (வயது-57), த.பெ.தர்மலிங்கம், பழைய கதவு எண்.4, புதிய கதவு எண்.16/180, ராம்நகர், மெய்யனூர், சேலம்-4 (தனியார்), 9) திரு.R.கண்ணன் (வயது-53), த.பெ.ராமமூர்த்தி, கதவு எண்.6/81, உஞ்சனை, குமாரமங்கலம்-வழி, திருச்செங்கோடு-வட்டம், நாமக்கல் மாவட்டம்.

(தனியார்), 10) திரு.M ஜெயராஜ் (வயது-33), த.பெ.மெய்யழகன், கதவு எண்.6/19-1, கோபல் செட்டியார் தோட்டம், வேலகவுண்டனூர், ஓமலூர், சேலம் மாவட்டம். (தனியார்), 11) திரு.P சபரிராஜ் (வயது-36), த.பெ.பன்னீர்செல்வம், கதவு எண்.30/22 மலையாண்டி தெரு, நாமக்கல் (தனியார்), 12) திரு.S ரத்தினவேல் (வயது-62), த.பெ.சக்திவடிவேல், கதவு எண்.581/3, முதலைமேடு, அக்சயம் அபார்ட்மெண்ட், வேலூர் ரோடு, திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம். (தனியார்), 13) திரு.V அருண் (வயது-22), த.பெ.வைகைநாதன், கதவு எண்.2/97 நடுதோளூர், தோளூர்-அஞ்சல், மோகனூர்-வட்டம், நாமக்கல் மாவட்டம். (தனியார்) ஆகியோர்கள் மீது இன்று 17.10.2020-ம் தேதி சனிக்கிழமை பகல் 10.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.03/AC/2020, u/s 7(a) and 8 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின் அசல், வாக்குமூலங்கள் ஆகியவற்றை கனம் நாமக்கல் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

(A.T. ஜெய் குமார்)
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.